අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்

## வினாத்தாள் I,II



தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

# கல்வி அமைச்சு

| 87 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

| தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

## தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்- I

**கவனிக்க.**

* *1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.*
* *உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.*
* *அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.*

1. மானிட சமூகத்தின் வளர்ச்சியில் ஆரம்பத் தொடர்பாடல் முறையோடு மிகவும் தொடர்புடையது.
   1. கடதாசி
   2. மரக்கிளைகளைத் தொங்கவிடுதல்
   3. அச்சிடல்
   4. வரைகலைநுட்பம்

2. வன் செய்திகளை அறிக்கையிடல் செய்வதற்கு பயன்படுத்தப்படும் நுட்பமுறை
   1. தலைமேல் பிரமிட் முறை
   2. பத்தி எழுத்துமுறை
   3. தலைகீழ் பிரமிட் முறை
   4. விவரண எழுத்துமுறை

3. இலங்கையில் வெளிவந்த முதலாவது தமிழ் செய்திப்பத்திரிகை
   1. கொழும்பு ஜேர்ணல்
   2. லக்மின பஹன
   3. இலங்காலோகய
   4. உதய தாரகை

4. ஹரோல்ட்.டி.லாஸ்வெல்லின் வரைவிலக்கணத்தின்படி, தொடர்பாடலின் முக்கிய உறுப்புக்களாவன.
   1. தொடர்பாடுநர் , செய்தி , ஊடகம் , பெறுநர் மற்றும் தாக்கம்.
   2. தொடர்பாடுநர் , செய்தி , ஊடகம் , பெறுநர் மற்றும் பின்னூட்டம்.
   3. செய்தி, ஊடுகடத்தப்படுபவர், பெறுநர், சேருமிடம் மற்றும் அனுபவக்களம்.
   4. தொடர்பாடுநர், செய்தி , இரைச்சல், பெறுநர் மற்றும் சேருமிடம்.

5. இணையத்தில் ஒரு தேடும் பொறி
   1. முகநூல் (Faceook)
   2. கீச்சகம் (Twitter)
   3. கூகுள் (Google)
   4. இன்ஸ்டகிராம் (Instagram)

6. ஒருவர் ஐம்புலன்கள் வழியாக கிடைக்கப்பெறுகின்ற பல்வேறு செய்திகளை பெற்று உள்வாங்கி அவற்றை விளங்கிக் கொள்வதானது.

1. புலக்காட்சி
2. அனுபவக்களம்
3. பொருட்கோடல்
4. குறிமுறையாக்கம்

7. செய்திப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் தலையங்கத்தினை தீட்டுபவர்.

1. பொதுமுகாமையாளர்.
2. பிரதம ஆசிரியர்.
3. பணிப்பாளர்.
4. உதவி ஆசிரியர்

8. புத்தகமொன்றினை முதற்தடவையாக அச்சிடும் வேளையில் சர்வதேச தர நிர்ணய புத்தக இலக்கம் (ISBN) பெற்றுக் கொள்ளப்படுவது

1. வெகுஜன ஊடக அமைச்சிடமிருந்து.
2. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடமிருந்து.
3. தேசிய நூலகம் மற்றும் ஆவண சேவைகள் சபையிடமிருந்து.
4. தேசிய கல்வி நிறுவகத்திடமிருந்து.

9. ஒருவரிடமிருந்து பலருக்குத் தகவலைப் பரிமாறுகின்ற முறைசாராத் தொடர்பாடல் மாதிரி.

1. தனிச்சங்கிலி மாதிரி
2. நிகழ்தகவுச்சங்கிலி மாதிரி
3. கொத்தணிச் சங்கிலி மாதிரி
4. புறணி பேசுதல் சங்கிலி மாதிரி

10. சிறுவர்களுக்கான தொலைக்காட்சி நாடகமொன்றைப் பார்த்துக் கொணடிருந்த கமலா, அந்த நாடகத்தில் நடித்த சிறுவனும் தனது சகோதரனும் ஒரே முகச் சாயலைக் கொண்டிருந்ததாக உணர்ந்தாள். இவ்வாறு உணர்வதற்குக் காரணமான தொடர்பாடல் வகை

1. வெகுசனத் தொடர்பாடல்
2. ஆளுள் தொடர்பாடல்
3. காட்சித் தொடர்பாடல்
4. ஆட்களிடைத் தொடர்பாடல்

11. கலங்கரை விளக்க அல்லது வெளிச்சவீட்டு நுட்பமுறை பின்பற்றப்படும் தொடர்பாடல்

1. ஆளுள் தொடர்பாடல்
2. ஆளிடைத் தொடர்பாடல்
3. குழுத் தொடர்பாடல்
4. வெகுசனத் தொடர்பாடல்

12. நிறைவேற்றதிகாரம் கொண்ட ஒரு உத்தியோகத்தரின் கையொப்பத்திற்கு அதிகாரம் கிடைக்க பயன்படுத்தக்கூடிய சாதனம்.

1. கணிப்பாண்
2. தபால் முத்திரையிடல் கருவி
3. திகதி முத்திரைக்கருவி
4. பதவி முத்திரைக் கருவி

13. ஒரு நிகழ்வுத் தொகுதியொன்றை வெளிப்படுத்தும் விதமாக வரிசை ஒன்றில் அமைந்த புகைப்படங்கள் துரித இடைவெளியில் சினிமா எறிவை ஒன்றினால் எறிகைப்படுத்தும் போது இடையறாத அசையும் காட்சியொன்று உருவாக்கப்பட்டது. இது நிகழக் காரணமாக அமைவது.

1. பார்வையின் தொடரறாத் தன்மை
2. படல வேகம்
3. குறும் பார்வை
4. காட்சியின் மாயத் தோற்றம்

14. இணையத்தளம் பற்றிய தவறான கூற்றினைத் தெரிவு செய்க.

1. இணையத் தளமென்பது இலத்திரனியல் தகவல்களின் சேர்க்கையாகும்.
2. இணையத் தளமொன்றினுள் நுழைவதற்கு அதிகமான சமயங்களில் கடவுச்சொல் ஒன்று தேவைப்படுகிறது.
3. இணையம் மூலம் எங்கிருந்தும் இணையத்தளத்தை அணுகமுடியும்.
4. இணையத்தளமொன்றைப் பராமரிப்பதற்கு நிலையான கட்டணமொன்றை செலுத்த வேண்டும்.

15. வானொலி ஊடகத்தின் பலவீனமாக அமைவது.

1. நேரடி ஊடகமாக காணப்படுதல்.

2. உடனடியாக கேட்போரிடம் தொடர்பு கொள்ளும் ஊடகமாக காணப்படுதல்.

3. புவியியல் தடைகள் இழிவளவாக காணப்படுதல்.

4. ஒலியை மட்டும் அடிப்படையாக கொண்ட ஊடகமாக காணப்படுதல்.

16. பின்வருவோரில் தொடர்பாடல் பற்றிய கணித மாதிரியை முன்வைப்பதில் பங்காற்றியவர் யார்?

1. எட்வேர்ட் ஹாபர்

2. ஹீயூ கிளிபர்ட்

3. குளோட் ஷனன் வீவர்

4. ஹரோல்ட் டீ.லாஸ்வெல்

17. நீங்கள் நூலகத்திலுள்ள வாசிப்பு மண்டபத்தில் நூலொன்றை வாசித்துக்கொண்டிருக்கும்போது ஓசை மௌனிக்கப்பட்ட (Silent mode) உங்களது கைத்தொலைபேசிக்கு நெருக்கமான ஒருவரிடமிருந்து அழைப்பொன்று வருகின்றது இச்சந்தர்பத்தில் மிகவும் பொருத்தமான துலங்கலாக அமைய வேண்டியது.

1. அழைப்பை பெற்றுக்கொள்ள வாசிப்பு மண்டபத்திலிருந்து வெளியே செல்லுதல்

2. அழைப்பை அப்பொழுதே பெற்றுக் கொள்ளுதல்

3. அழைப்பை பெற்றுக் கொள்ளாது துண்டித்தல்

4. அழைப்பபை பெற்றுக் கொண்டு வேலைப்பளு என கூறுதல்

18. துல்லியத்தன்மை + நடுநிலைத்தன்மை + தெளிவான தன்மை = நம்பகத்தன்மை செய்தி அறிக்கையிடல் தொடர்பான மேற்படி சமன்பாட்டை முன்வைத்தவர்.

1. சார்ள்ஸ் டானா ஆவார்.

2. போல்.டி.மெசூனியர் ஆவார்.

3. மில்ரடன் பிரஷ் ஆவார்.

4. கப்ரியேல். ஸ்கேத் ஆவார்.

19. புலமைச் சொத்து சட்டத்தின்மூலம் படைப்பாளியின் இரண்டு வகையான உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன அவையாவன.

1. சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் என்பனவாகும்.

2. பண்பாட்டு மற்றும் ஒழுக்க உரிமைகள் என்பனவாகும்.

3. ஒழுக்கம் மற்றும் பொருளாதார உரிமைகள் என்பனவாகும்.

4. பொருளாதாரம் மற்றும் சமூக உரிமைகள் என்பனவாகும்.

20. கறுப்பு வெள்ளை பிரதிகளை மட்டுமே பெற்றுக்கொள்ளக்கூடிய அச்சு இயந்திரம்.

1. டொட்மட்ரிக் அச்சியந்திரம் ஆகும்.

2. இங்ஜெக்ட் அச்சியந்திரம் ஆகும்.

3. லேசர் அச்சியந்திரம் ஆகும்.

4. புகைப்படப் பிரதி அச்சியந்திரம் ஆகும்.

21. தமிழ், சிங்களம், ஆங்கிலம் எழுத்துக்களை அறிமுகப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான கூற்றினைத் தெரிவு செய்க.

1. முன் மானிட மொழிகளில் இருந்து தோற்றம் பெற்றன.

2. மேலைத்தேய மொழிகளின் வேர்களில் இருந்து வளம் பெற்றவை.

3. பேச்சு மொழியினை அடிப்படையாக கொண்டு எழுத்து மொழியாகின.

4. குறியீட்டு வடிவ எழுத்துக்களாக வளர்ச்சியடைந்தவை ஆகும்.

**22.** கொரோணா போன்ற பெருந் தொற்றினை எதிர்கொள்வதற்காக கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை வெற்றிகரமாக பயன் படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான ஊடகத் தொகுதி

1. தொலைக்காட்சியும் இணையமும்
2. செய்திப்பத்திரிகையும், வானொலியும்
3. வானொலியும், தொலைக்காட்சியும்
4. செய்திப்பத்திரிகையும் , இணையமும்.

**23.** SFX - புகையிரத நிறுத்தும் சத்தம் என்பது

1. தொலைதூரப் படலம் ஆகும்.
2. ஒலி விளைவாகும்
3. தொடர்பாடல் தடை ஆகும்.
4. செம்மையாக்கல் வழிகாட்டியாகும்.

24. ரினு இயக்கி இசையமைத்திருந்த ஒரு குறுந்திரைப்படத்தினை வகுப்பறையினுள் காட்சிப்படுத்த வேண்டியுள்ளது இதற்கு அவசியமாக பயன்படுத்த வேண்டிய உபகரணம்.

1. மேந்தலை எறிவை
2. வழுக்கி எறிவை
3. துரித எறிவை
4. பல்லூடக எறிவை

**25.** மௌன சினிமாவினை தனது ஆற்றலினால் காட்சிப்படுத்துவதில் உயர் பாராட்டினைப் பெற்ற படைப்பாக்க கலைஞர்.

1. எத்தேனியஸ் கிரேச்சர்.
2. ஜோர்ஜ் ஈஸ்ட்மென்
3. சார்ளி சப்ளின்
4. ஜோன் லொகின் பெயர்ட்

26. புகைப்படம் எடுத்தலில் படலவேகம் (Film Speed) அளவிடப்பட உதவுவது.

1. ISO பெறுமதி ஆகும்
2. பிக்ஷல் (Pixel) அளவு ஆகும்
3. குவியத்தூரம் (F) பெறுமதியாகும்
4. பைட்(Byte) அளவு ஆகும்

27. அச்சுக் கடிதம் ஒன்றினை அவ்விதமாக வெளிநாடு ஒன்றிற்கு துரிதமாக அனுப்பக்கூடிய விதிமுறையாக அமைவது.

1. கடிதம் மூலமாக
2. தொலைநகல் மூலமாக
3. மின்னஞ்சல் மூலமாக
4. கைத்தொலைபேசி மூலமாக

28. மனித உரிமைகள் பற்றிய சர்வதேச சாசனத்தின் 19 ஆவது உறுப்புரையில் உள்ளடங்கியுள்ள உரிமைகள் சில கீழே காணப்படுகின்றன.

A - தமது கருத்தினை சுதந்திரமாக கொண்டிருக்க முடியும்.

B - தமது கருத்தை சுதந்திரமாக வெளிப்படுத்த முடியும்.

C - தேச எல்லைகளை கருத்தில் கொள்ளாது ஏதேனும் ஊடகத்தின் மூலமாக தகவல்களை பெற்றுக்கொள்ளவும் வழங்கிடவும் முடியும்.

மேற்கானும் நிலைமையை 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 14(அ) உபசரத்துடன் ஒப்பிடுகையில் ஒருமித்த தன்மை காணக்கிடைப்பது.

1. A யுடன் மட்டும்
2. A,B யுடன் மட்டும்
3. B யுடன் மட்டும்
4. C யுடன் மட்டும்.

**29.** கீழ்க்காணும் கூற்றுக்களுள் புதிய ஊடகத்தின் மிக குறைந்தளவான பொருத்தப்பாடு காணப்படும் கூற்று எது?

1. அதில் புவியியல் எல்லைகள் காணப்படாது.
2. எந்த நேரத்திலும் பெறுகை செய்யக் கூடியதாக காணப்படல்.
3. டிஜிற்றல் ஊடாக உபகரணங்கள் பயன்படுத்தப்படும்.
4. அனைத்துப் பெறுநர்களுக்கும் ஒரே தகவல் கிடைக்கப்பெறும்.

**30.** இலங்கை வானொலிச் சேவையின் முதல் சிங்கள அறிவிப்பாளரையும் சுயாதீனத் தொலைக்காட்சி சேவையின் நிறுவுநரையும் முறையே குறிப்பது.

1. வில்லியம் ஹென்றி, அனில் விஜேவர்தனா
2. ரி.எம். கொலம்பகே, ஷான் விக்கிரமசிங்க
3. எட்வர்ட் ஹாபர், பொப் கிறிஸ்டி
4. ரி.மயில்வாகனன், விளாடிமிர் ஸ்வொரிகிள்

31. ஊடக விமர்சகர் எனப்படுபவர்

1. ஊடக பெறுநர் உறவை வலுப்படுத்தும் ஒருவர்.
2. ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் ஒரு தொழில்சார் நபர்.
3. ஊடக செய்திகளிற்கு எதிர்வினையாற்றும் ஒரு செயற்படு பெறுநர்.
4. ஊடக நிறுவனங்களிற்கு சேவைகளினை வழங்கும் ஒர் அனுசரனையாளர்.

**32.** இலங்கையின் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் உள்ளடங்காதது.

1. வானொலி அலைவரிசைகளுக்கு உரிமம் வழங்குதல்
2. தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு ஒழுங்குபடுத்தல்களினை மேற்கொள்ளுதல்
3. ஊடக அலைவரிசைகளை எச்சரிப்பது மற்றும் உரிமங்களினை இரத்துச் செய்வது
4. இலத்திரனியல் ஊடகங்களிற்கு ஒழுக்க விதிகளை அமுலாக்குவது

**33.** தொலைக்காட்சியின் சிறுவர் நிகழ்ச்சிகளுக்கிடையே தோன்றும் விளம்பரங்கள் சிறுவர்களின் பெறுமதியை நுகர்வோராகக் காட்டுகின்றன. இந்தவகை விளம்பரங்களுக்கான சிறப்பான உதாரணமாக அமைவது.

1. துனிவகைகள், அழகுசாதனப் பொருட்கள், உணவு
2. சிறார்களுக்கான தயாரிப்புக்கள், போசனை, சிறார் சுகாதாரம்
3. பால்மா, சிறார் காப்புறுதி, கல்வி
4. செயற்கை உணவு, விளையாட்டு உபகரணங்கள், இனிப்புப் பொருட்கள்.

34. சமூக ஊடக வலைப்பின்னலில் தற்போதைய போக்குகள் என்பது வகுப்பறையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் கருப்பொருளாக அமைவது

யது : இது ஊடக சுதந்திரத்தின் புதிய படிக்கல், அதே வேளை வேறுபட்ட அபிப்பிராயங்களை பகிரும் சந்தர்ப்பங்களை இது விரிவாக்குகின்றது.

விது : பிரதான ஊடகங்களில் கலந்துரையாடப்படாத விடயங்கள் பற்றி பேசுவதற்கு சமூக ஊடகங்கள் அதிக இடத்தை கொண்டிருக்கின்றன.

மது: ஒருவருடைய அடையாளத்தை காண்பிக்காமலேயே அடுத்தவர்களின் தோற்றப்பாடுகளை சிதைப்பதற்கு சமூக ஊடகங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

சது : அச்சு ஊடகத்தோடு ஒப்பிடுகையில் தகவல்களை இற்றைப்படுத்தும் வாய்ப்பு சமூக ஊடக வலைப்பின்னல்களில் வரையறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறித்த பங்கேற்பாளர்களில் மிகச்சரியான கருத்துக்களை முன்வைத்தவர்கள்

1. யது விது மற்றும் சது
2. விது மது மற்றும் சது
3. யது விது மற்றும் மது
4. விது சது மற்றும் மது

**35.** கீழே ஊடகங்கள் சிலவற்றின் பண்புகள் தரப்பட்டுள்ளன.

A - விரைவான தன்மையுடையது

B- அதிக செலவுடையது

C - இடைத்தொடர்பு அதிகமுடையது

D - தாமதமான வெளிவருகை

இப்பண்புகளைப் பிரதித்துவம் செய்யும் ஊடக வரிசையாக அமைவது.

1. தொலைக்காட்சி செய்திப்பத்திரிகை வானொலி புதிய ஊடகம்
2. வானொலி தொலைக்காட்சி புதிய ஊடகம் செய்திப்பத்திரிகை
3. செய்திப்பத்திரிகை தொலைக்காட்சி வானொலி புதிய ஊடகம்
4. வானொலி செய்திப்பத்திரிகை புதிய ஊடகம் தொலைக்காட்சி

**36.** பின்வருவன வானொலி ஊடகம் பற்றிய சில கூற்றுக்களாகும்.

A - அது உடனடி வெளிப்பாட்டிற்கான ஊடகமாகும்.

B - அது வாய்மொழி தொடர்பாடலை மாத்திரம் பயன்படுத்தும் ஊடகமாகும்

C- அது ஒலியை அடிப்படையாக கொண்ட ஊடகமாகும்.

மேற்படி தரவுகளில் மிகச் சரியான கூற்றுக்களாவன

1. A மற்றும் B மாத்திரம்
2. A மற்றும் C மாத்திரம்
3. B மற்றும் C மாத்திரம்
4. A, B, C அனைத்தும்

**37.** பின்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.

A - குடும்பக்கட்டமைப்பு

B - ஆண் பெண் சமூகத்தன்மை

C - குடியுரிமை

D - மனித உரிமைகளும் பொறுப்புக்களும்

மேற்படி கூற்றுக்கள் உள்ளடங்குவது

1. சமூகப் பிரதித்துவக் கற்கை
2. பொருளாதார பிரதித்துவ கற்கை
3. சமய ஒழுங்குமுறை பிரதித்துவ கற்கை
4. அழகியல் பிரதித்துவ கற்கை

**38.** கமரா ஒன்றில் அவசியமாக இருக்கவேண்டிய அம்சங்களுள் பொருத்தமற்றது.

1. கமராவில்லை (Lense)
2. கமரா துவாரப்படலை (Shutter)
3. வில்லைத்தூரம் (Appeture)
4. புகைப்படச்சுருள் (Film role)

**39.** கீழ்வரும் கூற்றுகளினை அவதானிக்குக.

A - எந்த ஒரு இடத்திலும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்த முடியுமாயிருத்தல்

B - பெறுநரின் விருப்பத்திற்கேற்ப செய்திகளை தெரிவு செய்ய முடிதல்

C - பூளோக ரீதியாக வரையறைக்குட்பட்டதாக காணப்படுதல்

D - திறன் கைத்தொலைபேசியில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பின்மை.

ஆகிய கூற்றுக்களில் புதிய ஊடகங்களின் இயல்புகளோடு மிக நெருங்கிய தொடர்புடைய கூற்றுக்கள்

**1.** A யும் B யும் மாத்திரம் **2.** A யும் C யும் மாத்திரம்

**3.** B யும் C யும் மாத்திரம் **4.** C யும் D யும் மாத்திரம்

40. வெகுசன ஊடகப் பயன்பாட்டை மேற்கொள்ளும் நான்கு நபர்கள் பின்வருமாறு அறியப்படுகின்றனர்.

றொசான் : வெகுசன ஊடகங்களின் மறைமுக நோக்கங்களினை புரிந்து கொண்டவர்.

நிஷான் : வெகுசன ஊடகங்களிற்கு உடனடித் துலங்கலை மேற்கொள்பவர்

ஜெஷான் : வெகுசன ஊடக நிகழ்ச்சிகளை பெறுப்புணர்வுடன் பயன்படுத்துபவர்.

ரிஷான் : வெகுசன ஊடக விளம்பரங்களின் பெயரில் பொருட்களையும் சேவைகளையும் நுகர்பவர்.

இந்த நான்கு பேரிலும் விமர்சனத்திறன் மிக்க பெறுநர்கள்.

**1.** றொசான் மற்றும் நிஷான்

**2.** றொசான் மற்றும் ஜெஷான்

**3.** நிஷான் மற்றும் ஜெஷான்

**4.** ஜெஷான் மற்றும் ரிஷான்

**

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 87 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

| தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

## தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்- II

* **முதலாம்** வினாவையும் வேறு எவையேனும் **நான்கு** வினாக்களினையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களிற்கும் மாத்திரம் விடை எழுதுக.

* **முதலாம்** வினாவிற்கு 20 புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களிற்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

1. காலைப்பிராத்தனைக் கூட்டத்தின் போது கல்லூரியின் அதிபர் அடுத்த வருடம் கொண்டாடவுள்ள நூற்றாண்டு விழா தொடர்பிலும் விழா நினைவு மலருக்கான ஆக்கங்களினை தந்துதவுமாறும் அறிவித்தார்.

   i. மேற்குறித்த சம்பவம் எவ்வகைத் தொடர்பாடலினை சார்ந்தது?

   ii. மேற்குறித்த அறிவிப்பினை வழங்குவதற்கு அதிபர் பயன்படுத்தியிருக்கக்கூடிய ஊடக உபகரணங்கள் இரண்டினைப் பெயரிடுக.

   iii. குறித்த தொடர்பாடலின் வெற்றிக்கு அதிபர் பயன்படுத்தியிருக்ககூடிய உபாய முறையை குறிப்பிடுக.

   iv. மேற்குறித்த அறிவிப்பானது மாணவர் மத்தியில் சரிவர சென்றடையாத தன்மை இனங்காணப்பட்டது. அவ்வாறான சூழ்நிலைக்கு காரணமாக அமைந்த விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

   v. நூற்றாண்டு விழா மலரினை அச்சிடுவது பற்றி தீர்மானிக்கப்பட்டது. இதற்கென பயன்படுத்தக்கூடிய பக்க வடிவமைப்பு மென்பொருட்கள் இரண்டு தருக.

   vi. யுனஸ்கோ குறிப்பிடும் வரையறையின் படி ஒரு புத்தகம் கொண்டிருக்கவேண்டிய பக்கங்களின் குறைந்தளவு எண்ணிக்கை யாது?

   vii. புத்தகங்கள், சஞ்சிகைகள் தவிர வேறு அச்சூடக வடிவங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

   viii. மேற்குறித்த நூற்றாண்டு விழா மலரில் புகைப்படங்கள் பயன்படுத்தப்படுவதனால் அச்சூடகம் பெறும் இரண்டு ஆதாயங்களினை எடுத்துரைக்குக.

   ix. கணினி வழி அச்சிடலின் இரண்டு அனுகூலங்களினை குறிப்பிடுக.

   x. குறித்த மலரினை வெளியிடும் போது பணத்தொகை வரையறை செய்யப்பட்டிருந்தது. இச்செயற்பாட்டோடு தொடர்புடைய சட்டம் மற்றும் உரிமையை குறிப்பிடுக.

(2 X 10 = 20 புள்ளிகள்)

2. பாடசாலையில் நடைபெற்ற மாணவர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட மாணவரொருவர் தனது பிரச்சாரா நடவடிக்கைகளுக்காக பல்வேறுபட்ட நுட்பங்களை கையாண்டார்.

i. குறித்த மாணவர் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தியிருக்க கூடிய தொடர்பாடல் வடிவங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

ii. ஒரு தேர்தல் அலுவலகத்தின் ஊடகச் செயன்முறையுடன் தொடர்புடைய தகவலினை அடிப்படையாகக் கொண்ட இரண்டு செயற்பாடுகளினை தயாரிக்குக.

iii. மேற்குறித மாணவன் தேர்தலில் வெற்றியீட்டிய செய்தியை புகைப்படத்துடன் உமது பாடசாலையின் சுவர்ப்பத்திரிகையில் பிரசுரிக்க தீர்மானிக்கப்பட்டது. இதன் போது புகைப்படம் ஒன்றினை எடுத்தலில் கவனம் செலுத்தவேண்டிய மூன்று அம்சங்களினை சுருக்கமாக விளக்குக.

iv. தேர்தலில் சுவரொட்டிகளினை பயன்படுத்துவதன் நான்கு அனுகூலங்களினை உதாரணத்துடன் விளக்குக.

3.

i. இலங்கையில் தற்போது பொதுவாகப் பயன்படுத்தப்படும் வானொலி அலை (Radio Wave) வகை யாது?

ii. செய்திப்பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி , இணையம், ஆகிய ஊடகங்களின் பெறுநர்களினை அறிமுகப்படுத்திக் கொள்ள பயன்படும் விசேட பெயர்களினை முறையே எடுத்துரைக்குக.

iii. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மூன்று வெவ்வேறு வகையான நிகழ்ச்சிகளினை சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

iv. ஊடக அறிக்கையிடலில் பயன்படுத்தக்கூடிய மூலாதாரங்கள் நான்கினை சுருக்கமாக விபரிக்குக.

4. “இலத்திரனியல் ஊடகங்கள் அச்சு ஊடகங்களினை விட அதிகம் வலுமிக்கவை” என்ற தலைப்பில் பாட-சாலைகளுக்கிடையிலான விவாதப் போட்டியொன்று நடைபெற்றது.

i. வானொலி ஊடகத்தின் வலுவான அம்சங்கள் இரண்டினை எழுதுக.

ii. அச்சு ஊடகத்துடன் ஒப்பிடும் போது இலத்திரனியல் ஊடகத்தின் பலம் என நீர் கருதும் இரண்டு அம்சங்களினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

iii. விவாதத்தில் ஈடுபட்ட எதிர்த்தரப்பானது “அச்சு ஊடகத்திற்கு செய்தியை அறிக்கையிடுவதானது இலத்திரனியல் ஊடகத்தினை விட இலகுவானது” என்ற வாதத்தினை முன்வைத்து அச்சு ஊடகத்திற்கு செய்தியை அறிக்கையிடும் தலைகீழ் பிரமிட் முறையின் மூன்று அனுகூலங்களினை சுருக்கமாக விபரிக்குக.

iv. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் இரண்டிற்கும் பொதுவான ஒழுக்க நெறிகள் நான்கினை தனித்தனியாக விளக்குக.

5 . உங்களது நண்பி பிரியா அரச அலுவலகமொன்றில் இளநிலை நிறைவேற்று அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார் என கற்பனை செய்க.

i. பிரியா தனது அலுவலக பணிகளில் பங்கேற்கக் கூடிய ஆட்களிடைத் தொடர்பாடல் சந்தர்ப்பம் ஒன்றினையும், குழுத் தொடர்பாடல் சந்தர்ப்பம் ஒன்றினையும் குறிப்பிடுக.

ii. பிரியா தனக்கென உத்தியோகபூர்வ பதவி முத்திரை ஒன்றினை கொண்டிருப்பாராயின், அதனைப் பயன்படுத்துவது தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு அம்சங்களினை எழுதுக.

iii. தனது அலுவலகப் பணிகளுக்கென பிரியா தனது உத்தியோகபூர்வ தொலைபேசி ஒன்றினைப் பயன்படுத்தவேண்டுமெனில் அவர் அவசியம் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகள் மூன்றினை விபரிக்குக.

iv. அலுவலக ஆவணங்களினை தயாரிப்பதற்கு கணினி வெளியீட்டு செயலொழுங்கை பிரியா பயன்படுத்துபவராக இருந்தால், அது கொண்டிருக்கக்கூடிய அனுகூலங்கள் நான்கினை விபரிக்குக.

6. செவிப்புல - கட்புல ஊடகங்களின் வடிவம் மற்றும் உள்ளடக்கம் வெவ்வேறு விதமானது.

i. தொலைக்காட்சி நாடகங்களில் ஆண் மற்றும் பெண் சித்தரிக்கப்படும் விதம் பற்றிய கற்கையின் போது முக்கியத்துவம் பெறும் எண்ணக்கரு யாது?

ii. பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு தொலைக்காட்சி நாடகங்களினை வகைப்படுத்தக்கூடிய இரண்டு முறைகளினை விளக்குக.

iii. தகவலை படைப்பாக்க ரீதியாக தொடர்பாடல் செய்யும் போது பயன்படுத்தப்படும் கீழ்க்காணும் வெளியீட்டு விதிகளை உதாரணங்களுடன் விளக்குக.

1. கட்புல வெளியீட்டு விதி
2. செவிப்புல வெளியீட்டு விதி
3. மொழிசார் வெளியீட்டு விதி

iv. வெகுசன ஊடகத்தின் மூலம் முன்வைக்கப்படும் தகவல் சிறுவர்களது சமூக வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் பற்றி நான்கு அம்சங்களினூடாக விளக்குக.

7. ஊடகங்களின் தாக்கத்திலிருந்து பெறுநர் விடுபடுவதற்கு ஊடக விளங்கறிவுத்திறன் அவசியமாகும்.

i. பெறுநர் ஒருவர் ஊடகத்தின் மீது துலங்களை முன்வைக்கக்கூடிய இரண்டு முறைகளினை குறிப்பிடுக.

ii. ஊடகங்களினை பெறுகை செய்யும் பெறுநர்களின் பல்வகைமையை தீர்மானிக்கும் இரண்டு காரணிகளை குறிப்பிட்டு சிறு விவரிப்பு தருக.

iii. ஊடகம் மற்றும் பெறுநருக்கிடையிலான இடைத் தொடர்புகளினால் தற்போதைய சமூகத்தில் மக்கள் வாழ்க்கையில் நிகழுகின்ற மாற்றங்களினை மூன்று விடயப்பரப்புக்களினூடாக விளக்குக.

iv. பின்வரும் அம்சங்கள் தொடர்பில் உதாரணங்களுடன் விளக்குக.

அ. தொலைக்காட்சி ஊடகங்களில் வன்முறை

ஆ. வர்த்தக விளம்பரங்களின் தவறான பாதிப்புக்கள்.

***